

## மகளிர் தினத்தையொட்டி

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

சென்னை, மார்ச்.9-

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சுகம் ஆஸ்பத்திரி சார்பில் சென்னை சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் நேற்று இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை ஒரு பிரிவாகவும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை மற்றொரு பிரிவாகவும் முகாம் நடந்தது.

இந்த முகாமில் பி.எம்.ஐ. (உயரம் மற்றும் எடை), ரத்த அழுத்தம், சர்க்கரை மற்றும் பொது மருத்துவத்துக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. தேவைப்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகளும் வழங்கப்பட்டன. மகளிருக்கான உடல்நல ஆலோசனைகளும் தரப்பட்டது. பயணிகள், மெட்ரோ ஊழியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மருத்துவ முகாமில் ஆலோசனைகள் பெற்றனர்.

அதேபோல வடபழனி, செனாய்நகர், விமான நிலையம் ஆகிய 3 மெட்ரோ நிலையங்களிலும் மருத்துவ முகாம்களை மெட்ரோ ரெயில் நிறுவனம் மற்றும் உடல்நலம் மற்றும் உயிரியல் தொழில்துறை அமைப்பு நேற்று நடத்தியது.

மேலும் தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதின் ஒரு பகுதியாக நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து மெட்ரோ ரெயில் நிறுவனம் பறையாட்ட நிகழ்ச்சி நடத்தியது. வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் நேற்று இரவு நடந்த இந்த பறையாட்டத்தை பயணிகள் கண்டுகளித்தனர்.